ஜுன் 2015 – ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of June 2015)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–600 009

**கடித எண்.12333/பக5(1)/2015–3, நாள் 26.06.2015**

அனுப்புநர்
திருமதி த.சபிதா இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – தற்காலிகப் பணியிடங்கள் – 2011–12 ஆம் ஆண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 1590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 6872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 8462 தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் தொடர்நீட்டிப்பு வழங்குவது குறித்து கருத்துரு பெறப்பட்டுள்ளது–ஜுன் 2015ம் மாதத்திற்கான சம்பளம் வழங்க அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.212, பள்ளிக் கல்வி(வ.செ.2)த் துறை, நாள்.23.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக்கல்வி(வ.செ.2)த்துறை, நாள்.05.03.2012.
3. அரசாணை (நிலை) எண்229, பள்ளிக்கல்வி(வ.செ.2)த் துறை, நாள்.04.09.2012.
4. அரசாணை(1டி)எண்.219, பள்ளிக்கல்வி[வ.செ.2]த்துறை, நாள். 05.07.2013.
5. அரசாணை(1டி)எண்.82, பள்ளிக்கல்வி[பக5(1)]த்துறை, நாள். 08.04.2014.
6. அரசுக் கடித எண். 12333 /பக5(1)/2015, நாள் 27.04.2015 மற்றும் 29.05.2015.
7. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.095307/எல்/இ3/2014 நாள் 12.06.2015

---

பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி, அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 1 : 40 என்ற ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி 1590 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 6872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக தோற்றுவித்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

2. மேற்குறிப்பிட்டுள்ளவாறு தோற்றுவிக்கப்பட்ட 1590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட 6872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆகமொத்தம் 8462 தற்காலிக பணியிடங்களுக்கு, பார்வை 5ல் காணும் அரசாணையின்படி வழங்கப்பட்ட தற்காலிக தொடர் நீட்டிப்புக் காலம் 31.12.2014 உடன் முடிவுறுவதால், மேற்காணும் பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கருத்துரு பள்ளிக்கல்வி இயக்குநரால் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. மேற்காண் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கிட பரிசீலிக்கப்பட்டு வரும் நிலையில், துறைத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 2015, ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் பள்ளிக் கல்வி இயக்குநரால் விரைவு ஊதிய கொடுப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 6ல் காணும் அரசுக் கடிதங்களின் மூலம் மேற்குறிப்பிட்ட 8462 தற்காலிக பணியிடங்களுக்கு, ஏப்ரல் மற்றும் மே 2015ஆம் மாதங்களுக்கு ஊதியம் பெற அதிகார ஆணை அரசால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஜுன் 2015 மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழங்க அதிகாரம் (Pay Authorization) வழங்குமாறு பார்வை 7-ல் காணும் கடிதத்தின் மூலம் பள்ளிக்கல்வி இயக்குநர் வேண்டியுள்ளார்.

3. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ள நிலையில், 1590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட 6872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 8462 தற்காலிக பணியிடங்களுக்கு உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் ஜுன் 2015 மாதத்திற்கான சம்பளப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

4. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண். 35200/Edn-II/2015, நாள் 25.06.2015-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.

மாநிலக் கணக்காயர், சென்னை-18.

நிதி(கல்வி-II)துறை , சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.